தெல்லிப்பழை
திருமதி செல்வநாயகி சரவணமுத்து
அவர்களின்



# நினைவிதழ்

23 Springrice Road
Hithergreen
London
SE13 6HS
20-02-2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தோற்றம்
15.11.1917

மறைவு
04.01.2000

தெல்லிப்பழை
திருமதி செல்வநாயகி சரவணமுத்து

# அமரதினம்

*"திருவளர் மங்களமாம் பிரமாதி என்றதோர் ஆண்டில்*
*சீர்புகழ் மார்கழிமாதமதில் சிறப்புறுதிருவோணம்*
*சார்ந்திடு பூர்வபட்ஸ திருதியை திதியோடு சனிநாளில்*
*பார்புகழ் மாதரசி சிவன்தாள் சேர்ந்தாள் இனிதே"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமதி செல்வநாயகி சரவணமுத்து
## அவர்களின் வாழ்க்கைச்சரிதம்

ஈழவளநாட்டில் தெய்வத்தமிழும் சைவத்திருவும் செழித்துவிளங்கும் யாழப்பாண மாவட்டத்தில் கோவில்களாலும், கற்றுணர்ந்த சான்றோர்களாலும் நிரம்பபெற்ற தெல்லிப்பழை என்ற இடத்தில், வேளாளகுலத்தில் வாழையடி வாழையாக சீரோடு வழ்ந்தகுடும்பத்தில் திருவாளர் செல்லையா சின்னம்மா தம்பதியினருக்கு மூத்த புதல்வியாக 15.11.1917ம் ஆண்டில் இவர் பிறந்தார். இவரோடு சேர்த்து பார்வதி அம்மாள், பரலேஸ்வரன், சீதாதேவி, நகுலாதேவி, கமலாதேவி, கோபாலகிருஸ்ணன் எனும் ஆறுசகோதரர்கள் பிறந்தார்கள்.

சிறுவயதில் தாயாரை இழந்த இவர் தனது சகோதர சகோதரிகளை கண்ணும் கருத்துமாகக் காப்பாற்றி வளர்த்தார். சகோதரர்களும் கொடிதழுவும் கொம்பாக சகோதரியின் அரவணைப்பில் வாழ்ந்துவந்தார்கள். இதனால் இவர் தனது கல்வியைதொடரமுடியாமல் தனது உடன்பிறப்புகளுக்கு கல்வி செல்வத்தை ஊட்டுவதில் முனைந்துநின்று வெற்றிகண்டார். பின்பு இவர் திருமணவயதை அடைந்ததும் தெல்லிப்பழை கிழக்கில் அன்போடும் பண்போடும் வாழ்ந்துவந்த திருவாளர் இளையதம்பி தம்பதியினரின் தவப்புதல்வன் சரவணமுத்து அவர்களை கணவனாக அடைந்து இல்லறம் எனும் நல்லறத்தில் புகுந்தார்.

தெய்வத்தைபோற்றி கண்கண்டதெய்வமாம் கணவனோடு சேர்ந்துவாழ்ந்த இல்லறத்தின் நற்பேறாக ஆறு குழந்தைகளுக்கு அன்னையானார்.
மேகவர்ணன், நீலவர்ணன், பஞ்சவர்ணன், வர்ணஜோதி, வர்ணமலர், வர்ணராணி என்ற ஆறுசெல்வங்களைப்பெற்று மகிழ்வுற்றார். தன்பிள்ளைகளை கண்ணும்கருத்துமாக வளர்த்து கல்விஎனும் பெரும் பொக்கிசத்தைஅளித்து பூரிப்படைந்தார்.
பின்பு தன் பிள்ளைகளுக்கு ஏற்றமணவாழ்வினை ஏற்படுத்திக்கொடுக்கஎண்ணி பொருத்தமானவர்களை தேர்ந்தெடுத்து, மூத்தவர் மேகவர்ணன் பரமேஸ்வரியை மணந்து உஷாநந்தினி, பிரதீபன், ஜெகதீபன் என்னும் மூன்று செல்வங்களுக்கு தந்தையானார்.
நீலவர்ணன் ரோகினியை மணந்து நிருத்திகா எனும் செல்வத்தின் தந்தையானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சவர்ணன் காஞ்சனாவை கைப்பிடித்து கௌரி, கௌசி, வைகுந்தன் எனும் மூன்று குழந்தைகளைப்பெற்றார். துஷ்யந்தி, குமுதினி எனும் இருபிள்ளைகளுக்கு அன்னையான வர்ணஜோதி தில்லை நடராஜாவை மணம்புரிந்து மகிழ்வோடு வாழ்கிறார். வர்ணமலர் யோகேஷ்வரனை திருமணம் செய்து அர்ஜூனா, லிண்டா, ரயன் எனும் இரு செல்வங்களுக்கு தாயானார். இளையமகள் வர்ணராணி அருள்தாஸ்ஸை மணந்து தர்ஷன், ஜொனதன், அருண் எனும் குழந்தைகளுக்குத்தாயானார்.

தன் குடும்பம் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்ததைக் கண்ணாரகண்டு மகிழ்ந்தஇவர் பேரபிள்ளைகளின் பாசப்பிணைப்பிலே தன்னைமறந்தார். எல்லோருடைய அன்பிற்கும் மதிப்பிற்கும் பாத்திரமான இவர் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தார்.இறைவனிடத்தில் தீராத பக்தியுடைய இவர் தன்குடும்பமும் இவ்வுலகமும்நன்றாயிருக்க வேண்டும் என இறைவனிடம் அன்புடன் கேட்டுவணங்கும் பண்புடையவர்.இவ்வாறுவாழும் நாளில் லண்டனுக்குவந்து எல்லோருடனும் சந்தோஷமாகஇருந்தவேளையில் 08-01-2000 சனிக்கிழமை இரவு 11மணி 50 நிமிடமளவில்உற்றமும் சுற்றமும் தேம்பிஅழ புகழுடம்பை இவ்வுலகில்விட்டு, பூதவுடலை மண்ணுக்கு அளித்து எம்பிரான் உன்னாமுலை சமேத அண்ணாமலைப் பெருமானதுபாதாரவிந்தங்களில் சென்று சாந்தி பெற்றுவிட்டார்.

*அன்னாரது ஆத்மா சாந்தியடைய*

*எம்பிரான்சிவபெருமானைப் பிரார்த்திப்போமாக.*

**ஆக்கம் - மகேஸ்வரக்குருக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## விநாயகர் துதி

திரு விளங்கு மால்மருகா சேவல்தனில் ஏறி
வரும் அரன்றாள் ஈன்றருளு மைந்தா - முருகனுக்கு
முன் பிறந்த யானை முகவா உனைத் தொழுவேன்
என்கதைக்கு நீயென்றும் காப்பு

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டுஞ் - செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

சிறையாரும் மடக்கிளியே யிங்கேவா தேனொடுபால்
முறையாலே யுணத்தருவன் மொய்பவளத் தொடுதரளந்
துறையாரும் கடற்றோணி புரத்தீசன் றுளங்குமிளம்
பிறையாளன் றிருநாம மெனக்கொருகாற் பேசாயே.

வேயுறு தோளிபங்கன் விட முண்டகண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாளன் வெள்ளி
சனி பாம்பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்நினைந் தூட்டும் தாயினுஞ்சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடரந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

ஒளி வளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பழிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து அனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமாவிளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
பாலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாக
ஆலித்து நாட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமோடவல் பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவர்
கற்பக மென வினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடு மரன் மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர் கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரமெரி செய்த அச்சிவனுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துயரதுகொடு சுப்ரமணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குறமகளுட னச்சிறு மருகனை
அக்கண மணமருள்பெருமாளே.

## பெரிய புராணம்

பரமனை மதித்திடாய் பங்கையாசனன்
ஒருதலை கிள்ளியே எறிந்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

## திருமந்திரம்

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே

## திருவாசகம்

முத்தி நெறியறியாத மூர்க்கரொடு முயல்வேனே
புக்கி நெறியறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தம் மலம் அறிவித்து தசிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவார் ஆர் பெறுவார் அச்சோவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர் நான்மணி மாலை

### வெண்பா

1. (சக்தி பெறும்) பாவாணர் சாற்றுபொருள் யாதெனினும்
சித்(திபெறச் செய்வாக்கு வல்லமைக்கா) – அத்தனே!
(நின்) றனக்குக் காப்புரைப் பார்; நின் மீது செய்யும்நூல்
இன்றிதற்கும் காப்புநீ யே.

### கலித்துறை

2. நீயே சரணம் நினதரு ளேசர ணஞ்சரணம்
நாயேன் பலபிழை செய்து களைத்துனை நாடிவந்தேன்!
வாயே திறவாத மௌனத் திருந்துன் மலரடிக்குத்
தீயே நிகர்த்தொளி வீசுந் தமிழ்க்கவி செய்குவனே.

### விருத்தம்

3. செய்யுந் தொழிலேகாண்
சீர்பெற் றிடநீ அருள்செய்வாய்,
வையந் தனையும் வெளியினையும்
வானத் தையுமுன் படைத்தவனே!
ஐயா! நான்முகப் பிரமாவே
யானைமுகனே! வாணிதனைக்
கையா லணைத்துக் காப்பவனே?
கமலா சனத்துக் கற்பகமே!

### அகவல்

4. கற்பக விநாயகக் கடவுளே, போற்றி!
சிற்பர மோனத் தேவன் வாழ்க!
வாரண முகத்தான் மலர்த்தாள் வெல்க!
ஆரண முகத்தான் அருட்பதம் வெல்க!
படைப்புக் கிறையவன்; பண்ணவர் நாயகன்,

இந்திர குரு எனது இதயத் தொளிர்வான்
சந்திர மவுலித் தலைவன் மைந்தன்
கணபதி தாளைக் கருத்திடை வைப்போம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணமதிற் பலவாம்; கூறக் கேளீர்!
உட்செவி திறக்கும்; அகக்கண் ஒளிதரும்;
அக்கினி தோன்றும்; ஆண்மை வலியுறும்?
திக்கெலாம் வென்று ஜயக்கொடி நாட்டலாம்;
கட்செவி தன்னைக் கையிலே எடுக்கலாம்;
விடத்தையும் நோவையும் வெம்பகை யதனையும்
துச்சமென் றெண்ணித் துயரிலா திங்கு
நிச்சலும் வாழ்ந்து நிலைபெற் றோங்கலாம்;
அச்சந் தீரும். அமுதம் விளையும்;
வித்தை வளரும், வேள்வி ஓங்கும்;
அமரத் தன்மை எய்தவும்
இங்குநாம் பெறலாம்; இஃதுணர் வீரே,

வெண்பா

5. (உண)ர்வீர் உணர்வீர் உலகத்தீர்! இங்குப்
(புணர்(வி)ர். அமர (ரு)ம் போக(ம்)—கண(ப)தியைப்
(போத வடிவாகப் போற்றிப் பணிந்திடுமின்
காதலுடன் கஞ்சமலர் கால்)

கலித்துறை

6 காலைப் பிடித்தேன் கணபதி! நின்பதங் கண்ணிலொற்றி
நூலைப் பலபல வாகச் சமைத்து நொடிப்பொழு(தும்)
வேலைத் தவறு நிகழாது நல்ல வினைகள் செய்துன்
கோலை மனமெனும் நாட்டின் நிறுத்தல் குறியெனக்கே.

விருத்தம்

7. எனக்கு வேண்டும் வரங்களை
இசைப்பேன் கேளாய் கணபதி!
மனத்திற் சலன மில்லாமல்,
மதியில் இருளே தோன்றாமல்,
நினைக்கும் பொழுது நின்மவுன
நிலைவந் திடநீ செயல் வேண்டும்,
கனக்குஞ் செல்வம் நூறுவயது;
இவையும் தர நீ கடவாய்.

அகவல்

8. கடமை யாவன; தன்னைக் கட்டுதல்
பிறர்துயர் தீர்த்தல் பிறர்நலம் வேண்டுதல்
விநாயகத் தேவனாய் வேலுடைக் குமரனாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரா யணனாய் நதிச்சடை முடியனாய்
பிறநாட் டிருப்போர் பெயர்பல கூறி,
அல்லா யெஹோவா! எனத்தொழு தன்புறும்
தேவருந் தானாய் திருமகள் பாரதி.
உமையெனுந் தேவியர் உகந்தவான் பொருளாய்,
உலகெலாங் காக்கும் ஒருவனைப் போற்றுதல்,
இந்நான் கேயிப் பூமியி லெவர்க்கும்
கடமை யெனப்படும்; பயனிதில் நான்காம்;
அறம் பொருள் இன்பம், வீடெனு முறையே,
தன்னை யாளுஞ் சமர்த்தெனக் கருள்வாய்
மணக்குள விநாயகா! வான்மறைத் தலைவா!
தனைத்தான் ஆளுந் தன்மைநான் பெற்றிடில்
எல்லாப் பயன்களும் தாமே எய்தும்,
அசையா நெஞ்சம் அருள்வாய்; உயிரெலாம்
இன்புற் றிருக்க வேண்டி நின் னிருதாள்
பணிவதே தொழிலெனக் கொண்டு
கணபதி தேவா! வாழ்வேன் களித்தே.

வெண்பா

9. களியுற்று நின்று, கடவுளே! இங்குப்
பழியற்று வாழ்ந்திடக்கண் பார்ப்பாய்—ஒளிபெற்றுக்
கல்விபல தேர்ந்து கடமையெலாம் நன்காற்றித்
தொல்வினைக்கட் டெல்லாம் துறந்து

கலித்துறை

10. துறந்தார் திறமை பெரிததி னும்பெரி தாகுமிங்குக்
குறைந்தா ரைக்காத் தெளியார்க்குண வீந்து குலமகளும்
அறந்தாங்கு மக்களும் நீடூழி வாழ்கென அண்டமெலாம்
சிறந்தாளும் நாதனைப் போற்றிடுந் தொண்டர் செயுந்தவமே

விருத்தம்

11. தவமே புரியும் வகையறியேன்,
சலியா துறநெஞ் சறியாது
சிவமே; நாடிப் பொழு தனைத்தும்
தயங்கித் தயங்கி நிற்பேனை,
நவமா மணிகள் புனைந்தமுடி
நாதா! கருணை யாளனே! தத்
துவமாகிய தோர் பிரணவமே
அஞ்சேல் என்று சொல்லுதியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகவல்

12. சொல்லினுக் கரியனாய் சூழ்ச்சிக் கரியனாய்ப்
பல்லுரு வாகிப் படர்ந்தவான் பொருளை,
உள்ளுயி ராகி உலகங் காக்கும்
சக்தியே தானாந் தனிச்சுடர்ப் பொருளை,
சக்தி குமாரனைச் சந்திர மவுலியைப்
பணிந்தவ னுருவிலே பாவனை நாட்டி,
ஓமெனும் பொருளை உளத்திலே நிறுத்தி,
சக்தியைக் காக்கும் தந்திரம் பயின்று
யார்க்கும் எளியனாய், யார்க்கும் வலியனாய்,
யார்க்கும் அன்பனாய், யார்க்கும் இனியனாய்
வாழ்ந்திட விரும்பினேன்; மனமே! நீயிதை
ஆழ்ந்து கருதி ஆய்ந்தாய்ந்து பலமுறை
சூழ்ந்து, தெளிந்து பின் சூழ்ந்தார்க் கெல்லாம்
கூறிக் கூறிக் குறைவறத் தேர்ந்து
தேறித் தேறிநான் சித்திபெற் றிடவே,
நின்னா லியன்ற துணைபுரி வாயேல்
பொன்னால் உனக்கொரு கோயில் புனைவேன்;
மனமே! எனை நீ வாழ்வித் திடுவாய்!
வீணே யுழலுதல் வேண்டா
சக்தி குமாரன் சரண்புகழ் வாயே!

வெண்பா

13. புகழ்வோம் கணபதிநின் பொற்கழலை நாளும்
திகழ்வோம் பெருங்கீர்த்தி சேர்ந்தே—இகழ்வோமே
புல்லரக்கப் பாதகரின் பொய்யெலாம்; ஈங்கிதுகாண்
வல்லபைகோன் தந்த வரம்

கலித்துறை

14. வரமே நமக்கிது கண்டீர் கவலையும் வஞ்சனையும்
கரவும் புலமை விருப்பமும் ஐயமும் காய்ந்தெறிந்து
'சிரமீது எங்கள் கணபதி தாள்மலர் சேர்த்தெமக்குத்
தரமேகொல் வானவர்' என்றுளத் தேகளி சார்ந்ததுவே

விருத்தம்

15. சார்ந்து நிற்பாய் எனதுளமே
சலமும் கரமும் சஞ்சலமும்
பேர்ந்து பரம சிவாநந்தப்
பேற்றை நாடி நாள்தோறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்ந்த வேதப் பொருள்காட்டும்
ஐயன், சக்தி தலைப்பிள்ளை,
கூர்ந்த இடங்கள் போக்கிடுநங்
கோமான் பாதக் குளிர்நிழலே.

அகவல்

16. நிழலினும் வெயிலினும் நேர்ந்த நற்றுணையாய்த்
தழலினும் புனலினும் அபாயந் தவிர்த்து,
மண்ணினும் காற்றினும் வானினும் எனக்குப்
பகைமை யொன்றின்றிப் பயந்தவிர்த் தாள்வான்
உள்ளத் தோங்க நோக்குறும் விழியும்,

மௌன வாயும், வரந்தரு கையும்,
உடையநம் பெருமான் உணர்விலே நிற்பான்,
ஓமெனும் நிலையில் ஒளியாத் திகழ்வான்.
வேத முனிவர் விரிவாகப் புகழ்ந்த
பிருஹஸ் பதியும் பிரமனும் யாவும்

தானே யாகிய தனிமுதற் கடவுள்,
யானென தற்றார் ஞானமே தானாய்
முக்தி நிலைக்கு மூலவித் தாவான்.
சத்தெனத் தத்தெனச் சதுர்மறை யாளர்
நித்தமும் போற்றும் நிர்மலக் கடவுள்

ஏழையர்க் கெல்லாம் இரங்கும் பிள்ளை.
வாழும் பிள்ளை, மணக்குளப் பிள்ளை,
வெள்ளாடை தரித்த விட்டுணு வென்று
செப்பிய மந்திரத் தேவனை
முப்பொழு தேத்திப் பணிவது முறையே.

வெண்பா

17. முறையே நடப்பாய் முழுமூட நெஞ்சே!
இறையேனும் வாடாய் இனிமேல்—கறையுண்ட
கண்டன் மகன்வேத காரணன் சக்திமகன்
தொண்டருக் குண்டு துணை.

கலித்துறை

18. துணையே! எனதுயி ருள்ளே யிருந்து சுடர்விடுக்கும்
மணியே எனதுயிர் மன்னவ னே! என்றன் வாழ்வினுக்கோர்
அணியே! எனுள்ளத்தி லார முதே! என தற்புதமே
இணையே துனக்குரைப்பேன் கடை வானில் எழுஞ்சுடரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருத்தம்.

19. சுடரே போற்றி! கணத்தேவர்
துரையே போற்றி! எனக்கொன்றும்
இடரே யின்றிக் காத்திடுவாய்
எண்ணாயிரங்கால் முறையிட்டேன்;
படல்வான் வெளியிற் பலகோடி
கோடி கோடிப் பலகோடி
இடறா தோடும் அண்டங்கள்
இசைத்தாய் வாழி இறையவனே!

## அகவல்

20. இறைவி இறைவன் இரண்டும்ஒன் றாகித்
தாயாய்த் தந்தையாய்ச் சக்தியும் சிவனுமாய்
உள்ளொளி யாகி உலகெலாந் திகழும்
பரம்பொரு ளேயோ? பரம்பொருளேயோ;
ஆதிமூலமே? அனைத்தையும் காக்கும்

தேவ தேவா! சிவனே கண்ணா
வேலா! சாத்தா! விநாயகா! மாடா!
இருளா! சூரியா! இந்துவே! சத்தியே!
வாணீ காளீ! மாமக ளேயோ!
ஆணாய்ப் பெண்ணாய் அலியாய், உள்ளது

யாதுமாய் விளங்கும் இயற்கைத் தெய்வமே
வேதச் சுடரே! மெய்யாங் கடவுளே!
அபயம் அபயம் அபயம்நான் கேட்டேன்;
நோவு வேண்டேன் நூற்றாண்டு வேண்டினேன்;
அச்சம் வேண்டேன் அமைதி வேண்டினேன்;

உடைமை வேண்டேன் உன்துணை வேண்டினேன்;
வேண்டா தனைத்தையும் நீக்கி
வேண்டிய தனைத்தும் அருள்வதுன் கடனே.

## வெண்பா

21. கடமைதா னேது கரிமுகனே! வையத்
திடம்நீ யருள்செய்தாய், எங்கள்—உடைமைகளும்
இன்பங் களுமெல்லாம் ஈந்தாய் நீ யாங்களுனக்(கு)
என்புரிவோம் கைம்மா றியம்பு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலித்துறை

22. இயம்பு மொழிகள் புகழ்மறையாகும்; எடுத்தவினை
பயன்படும்; தேவர் இருபோதும் வந்து பதந்தருவர்
அயன்பதி முன்னோன் கணபதி சூரியன் ஆனைமுகன்
வியன்புகழ் பாடிப் பணிவார் தமக்குறும் மேன்மைகளே

விருத்தம்

23. மேன்மை படுவாய் மனமே! கேள்
விண்ணின் இடிமுன் விழுந்தாலும்,
பான்மை தவறி நடுங்காதே
பயத்தால் ஏதும் பயனில்லை;
யான்முன் உரைத்தேன் கோடிமுறை
இன்னும் கோடி முறைசொல்வேன்,
ஆன்மா வான கணபதியின்
அருளுண்டு அச்சம் இல்லையே

அகவல்

24. அச்ச மில்லை அமுங்குதலில்லை.
நடுங்குதலில்லை நாணுதலில்லை
பாவ மில்லை பதுங்குத லில்லை.
ஏது நேரினும் இடர்பட மாட்டோம்;
அண்டஞ் சிதறினால் அஞ்சமாட்டோம்

கடல் பொங்கி எழுந்தாற் கலங்க மாட்டோம்;
யார்க்கும் அஞ்சோம் எதற்கும் அஞ்சோம்;
எங்கும் அஞ்சோம் எப்பொழுதும் அஞ்சோம்;
வான முண்டு மாரி யுண்டு;
ஞாயிறும் காற்றும் நல்ல நீரும்

தீயும் மண்ணும் திங்களும் மீன்களும்
உடலும் அறிவும் உயிரும் உளவே;
தின்னப் பொருளும் சேர்ந்திடப் பெண்டும்
கேட்கப் பாட்டும் காணநல் லுலகமும்
களித்துரை செய்யக் கணபதி பெயரும்

என்றுமிங் குளவாம்! சலித்திடாய்; ஏழை
நெஞ்சே! வாழி நேர்மையுடன் வாழி!
வஞ்சகக் கவலைக் கிடங்கொடேல் மன்னோ!
தஞ்ச முண்டு சொன்னேன்,
செஞ்சுடர்த் தேவன் சேவடி நமக்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்பா

25. நமக்குத் தொழில்கவிதை. நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதுஞ் சோரா திருத்தல்—உமைக்கினிய
மைந்தன் கணநாதன் நங்குடியை வாழ்விப்பான்!
சிந்தையே இம்மூன்றும் செய்.

## கலித்துறை

26. செய்யுங் கவிதை பராசக்தி யாலே செயப்படுங்காண்
வையத்தைக் காப்பவள் அன்னை சிவசக்தி வண்மை யெல்லாம்
ஐயத்தி லுந்துரி தத்திலுஞ் சிந்தி யழிவதென்னே!
பையத் தொழில்புரி நெஞ்சே! கணாதிபன் பக்திகொண்டே!

## விருத்தம்

27. பக்தி யுடையார் காரியத்திற்
பதறார்! மிகுந்த பொறுமையுடன்
வித்து முளைக்குந் தன்மைபோல்
மெல்லச் செய்து பயனடைவார்
சக்தி தொழிலே அனைத்துமெனிற்
சார்ந்த நமக்குச் சஞ்சலமென்?
விந்தைக் கிறைவா! கணநாதா!
மேன்மைத் தொழிலிற் பணியெனையே.

## அகவல்

28. எனை நீ காப்பாய், யாவுமாந் தெய்வமே!
பொறுத்தா ரன்றோ பூமி யாள்வார்?
யாவும் நீ யாமின் அனைத்தையும் பொறுத்தல்
செவ்விய நெறி. அதிற் சிவநிலை பெறலாம்;
பொங்குதல் போக்கிற் பொறையெனக் கீவாய்;

மங்கள குணபதி; மணக்குள கணபதி;
நெஞ்சக் கமலத்து நிறைந்தருள் புரிவாய்;
அகல்விழி உமையாள் ஆசைமகனே
நாட்டினைத் துயரின்றி நன்கமைத் திடுவதும்,
உளமெனும் நாட்டை ஒருபிழை யின்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆள்வதும், பேரொளி ஞாயிறே யனைய
சுடர்தருமதி யொடு துயரின்றி வாழ்தலும்
நோக்கமாக் கொண்டு நின்பதம் நோக்கினேன்.
காத்தருள் புரிக கற்பக விநாயகா!
காத்தருள் புரிக, கடவுளே உலகெலாம்

கோத்தருள் புரிந்த குறிப்பரும் பொருளே!
அங்குச பாசமும் கொம்பும் தரித்தாய்
எங்குல தேவா போற்றி!
சங்கரன் மகனே! தாளிணை போற்றி!

வெண்பா

29. போற்றி! கலி யாணிபுதல்வனே! பாட்டினிலே
ஆற்ற லருளி அடியேனைத்—தோற்றமுடன்
வாணிபதம் போற்றுவித்து வாழ்விப்பாய்! வாணியருள்
வீணையொலி என் நாவில் உண்டு.

கலித்துறை

30. விண்டுரை செய்குவன் கேளாய் புதுவை விநாயகனே
தொண்டுன தன்னை பராசக்திக் கென்றும்
தொடர்ந்திடுவேன்!
பண்டைச் சிறுமைகள் போக்கி, என்னாவிற் பழுத்தசுவைத்
தெண்டமிழ்ப்பாடல் ஒரு கோடி மேவிடச் செய்குவையே

விருத்தம்

31. செய்யாள் இனியாள் ஸ்ரீதேவி
செந்தா மரையிற் சேர்ந்திருப்பாள்,
கையா ளெனநின் றடி யேன்செய்
தொழில்கள் யாவும் கைகலந்து
செய்வாள் புகழ்சேர் வாணியுமென்
னுள்ளே நின்று தீங்கவிதை
பெய்வாள்! சக்தி துணைபுரிவாள்
பிள்ளாய்; நின்னைப் பேசிடிலே

அகவல்

32. பேசாப் பொருளைப் பேசநான் துணிந்தேன்;
கேட்கா வரத்தைக் கேட்கநான் துணிந்தேன்;
மண்மீ துள்ள மக்கள், பறவைகள்
விலங்குகள் பூச்சிகள் புற்பூண்டு மரங்கள்;
யாவுமென் வினையால் இடும்பை தீர்ந்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமுற் றன்புடன் இணங்கிவாழ்ந் திடவே
செய்தல் வேண்டும் தேவ தேவா!
ஞானா காசத்து நடுவே நின்றுநான்
'பூமண்ட லத்தில் அன்பும் பொறையும்
விளங்குக; துன்பமும், மிடிமையும் நோவும்

சாவும் நீங்கிச் சார்ந்தபல் லுயிரெலாம்
இன்புற்று வாழ்க' என்பேன்! இதனை நீ
திருச்செவி கொண்டு திருவுளம் இரங்கி
'அங்ஙனே யாகுக' என்பாய் ஐயனே
இந்நாற் இப்பொழு தெனக்கிவ் வரத்தினை

அருள்வாய்; ஆதிமூலமே அநந்த
சக்தி குமாரனே! சந்திர மவுலீ
நித்தியப் பொருளே! சரணம்
சரணம் சரணம் சரணமிங் குனக்கே.

வெண்பா

33. உனக்கேஎன் ஆவியும் உள்ளமும் தந்தேன்;
மனக்கேதம் யாவினையும் மாற்றி எனக்கே நீ
நீண்டபுகழ் வாணாள் நிறைசெல்வம் பேரழகு
வேண்டுமட்டும் ஈவாய் விரைந்து.

கலித்துறை

34. விரைந்துன் திருவுள மென்மீ திரங்கிட வேண்டுமையா!
குரங்கை விடுத்துப் பகைவரின்தீவைக் கொளுத்தியவன்
அரங்கத் திலேதிருமாதுடன் பள்ளிகொண் டான்மருகா
வரங்கள் பொழியும் முகிலே! என்னுள்ளத்து வாழ்பவனே

விருத்தம்

35. வாழ்க புதுவை மணக்குளத்து
வள்ளல் பாதமணி மலரே!
ஆழ்க உள்ளம் சலனமிலாது!
அகண்ட வெளிக்கண் அன்பினையே
சூழ்க! துயர்கள் தொலைந்திடுக!
தொலையா இன்பம் விளைந்திடுக!
வீழ்க! கலியின் வலியெல்லாம்
கிருத யுகந்தான் மேவுகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகவல்

86. மேவி மேவித் துயரில் வீழ்வாய்.
எத்தனை கூறியும் விடுதலைக் கிசையாய்.
பாவி நெஞ்சே! பார்மிசை நின்னை
இன்புறச் செய்வேன்; எதற்குமினி அஞ்சேல்;
ஐயன் பிள்ளை (யார்) அருளால் உனக்குநான்
அபயமிங் களித்தேன் நெஞ்(சே)
நினக்குநான் உரைத்தன நிலை நிறுத்தி(டவே)
தீயிடைக் குதிப்பேன் கடலுள் வீழ்வேன்;
வெவ்விட முண்பேன், மேதினி யழிப்பேன்;
ஏதுஞ் செய்துனை இடரின்றிக் காப்பேன்;
மூட நெஞ்சே முப்பது கோடி
முறையுனக் குரைத்தேன்; இன்னும் மொழிவேன்;
தலையிலிடி விழுந்தால் சஞ்சலப் படாதே;
ஏது நிகழினும் நமக்கேன்?" என்றிரு;
பராசக்தி யுலகத்தின் படியுலகம் நிகழும்;
நமக்கேன் பொறுப்பு? "நான் என்றோர் தனிப்பொருள்
இல்லை; நானெனும் எண்ணமே வெறும்பொய்"
என்றான் புத்தன் இறைஞ்சுவோம் அவன்பதம்
இனியெப் பொழுதும் உரைத்திடேன், இதை நீ
மறவாதிருப்பாய், மடமை நெஞ்சே!
கவலைப் படுதலே கரு நரகம்மா!
கவலையற் றிருத்தலே முக்தி,
சிவனொரு மகனிதை நினக்கருள் செய்கவே.

### வெண்பா

37. செய்கதவம்! செய்கதவம்! நெஞ்சே! தவம்செய்தால்,
எய்த விரும்பியதை எய்தலாம்—வையகத்தில்
அன்பிற் சிறந்த தவமில்லை. அன்புடையார்
இன்புற்று வாழ்தல் இயல்பு.

### கலித்துறை

38. இயல்பு தவறி விருப்பம் விளைதல் இயல்வதென்றாம்
செயலிங்கு சித்த விருப்பினைப் பின்பற்றும்; சீர்மிகவே
பயிலுநல்லன்பை இயல்பெனக்கொள்ளு திர்பாரிலுள்ளீர்
முயலும் வினைகள் செழிக்கும் விநாயகன் மொய்ம்பினிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருத்தம்

39. மொய்க்குங் கவலைப் பகைபோக்கி
முன்னோன் அருளைத் துணையாக்கி,
எய்க்கும் நெஞ்சை வலியுறுத்தி
உடலை இரும்புக் கிணையாக்கிப்
பொய்க்குங் கலியை நான்கொன்று
பூலோ கத்தார் கண்முன்னே.
மெய்க்குங் கிருத யுகத்தினையே
கொணர்வேன், தெய்வ விதியிஃதே

## அகவல்

40. விதியே வாழி! விநாயகா வாழி!
பதியே வாழி! பரமா வாழி!
சிதைவினை நீக்கும் தெய்வமே போற்றி!
புதுவினை காட்டும் புண்ணியா போற்றி!
மதியினை வளர்க்கும் மன்னே, போற்றி!

இச்சையும் கிரியையும் ஞானமும் என்றாக்கு
மூல சக்தியின் முதல்வா போற்றி!
பிறைமதி சூடிய பெருமான் வாழி!
நிறைவினைச் சேர்க்கும் நிர்மலன் வாழி!
காலம் மூன்றையும் கடந்தான் வாழி!

சக்தி தேவி சரணம் வாழி!
வெற்றி வாழி! வீரம் வாழி!
பக்தி வாழி! பலபல காலமும்
உண்மை வாழி! ஊக்கம் வாழி!
நல்ல குணங்களே நம்மிடை யமரர்

பதங்களாம் கண்டீர்! பாரிடை மக்களே
கிருத யுகத்தினைக் கேடின்றி நிறுத்த
விரதம் நான் கொண்டனன்; வெற்றி
தருஞ்சுடர் விநாயகன் தாளிணை வாழியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வள்ளிப்பாட்டு—1

பல்லவி

எந்த நேரமும் நின் மையல் ஏறுதடீ
குறவள்ளீ; சிறு கள்ளி!

சரணங்கள்

(இந்த) நேரத்தி லேமலை வாரத்தி லேநதி
யோரத்தி லேயுனைக் கூடி—நின்றன்
வீரத் தமிழ்ச்சொல்லின் சாரத்தி லேமனம்
மிக்க மகிழ்ச்சிகொண் டாடி—குழல்
பாரத்தி லேஇத ழீரத்தி லேமுலை
யோரத்திலே அன்பு சூடி நெஞ்சம்
ஆரத் தழுவி அமர நிலை பெற்றதன்
பயனை யின்று காண்பேன். (எந்த நேரமும்)

வெள்ளை நிலாவிங்கு வானத்தை மூடி
விரிந்து பொழிவது கண்டாய் ஒளிக்
கொள்ளை யிலேயுனைக் கூடி முயங்கிக்
குறிப்பினி லேயொன்று பட்டு—நின்றன்
பிள்ளைக் கிளிமென் குதலையி லேமனம்
பின்ன மறச் செல்லவிட்டு—அடி
தெள்ளிய ஞானப் பெருஞ்செல்வ மே! நினைச்
சேர விரும்பினன் கண்டாய் (எந்த நேரமும்)

வட்டங்க ளிட்டுங் குளமக லாத
மணிப்பெருந் தெப்பத்தைப் போல—நினை
விட்டு விட்டுப்பல லீலைகள் செய்து நின்
மேனி தனைவிட லின்றி—அடி
எட்டுத் திசையும் ஒளர்ந்திடுங் காலை
இரவியைப் போன்ற முகத்தாய்!—முத்தம்
இட்டுப் பலமுத்த மிட்டுப் பலமுத்தம்
இட்டுனைச் சேர்ந்திட வந்தேன் (எந்த நேரமும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகன் பாட்டு

ராகம்—நாட்டைக் குறிஞ்சி) (தாளம்—ஆதி

பல்லவி

முருகா! — முருகா! — முருகா!

சரணங்கள்

வருவாய் மயில் மீதினிலே
வடிவே லுடனே வருவாய்!
தருவாய் நலமும் தகவும் புகழும்
தவமும் திறமும் தனமும் கனமும் (முருகா)

அடியார் பலரிங் குளரே;
அவரை விடுவித் தருள்வாய்!
முடியா மறையின் முடிவே! அசுரர்
முடிவே கருதும் வடிவே லவனே (முருகா)

சுருதிப் பொருளே, வருக
துணிவே, கனலே, வருக!
கருதிக் கருதிக் கவலைப் படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல் (முருகா)

அமரா வதிவாழ் வுறவே
அருள்வாய்! சரணம், சரணம்!
குமரா பிணியா வையுமே சிதறக்
குமுறும் சுடர்வே லவனே சரணம்! (முருகா)

அறிவா கியகோ யிலிலே
அருளா கியதாய் மடிமேல்
பொறிவே லுடனே வளர்வாய்! அடியார்
புதுவாழ் வுறவே புவிமீ தருள்வாய்! (முருகா)

குருவே! பரமன் மகனே!
குகையில் வளருங் கனலே!
தருவாய் தொழிலும் பயனும் அமரர்
சமராதிபனே! சரணம் சரணம்! (முருகா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிகள்

எமது குடும்பத் தலைவி திருமதி செல்வநாயகி சரவணமுத்து அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்த வேளையில் எமக்கு உதவியாக இருந்த நண்பர்களுக்கும்

இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும்

இறுதிக்கிரியைகளை சிறப்புற ஒழுங்கு செய்த உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும்

தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்த உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும்

ஆத்மசாந்திக் கிரியைகளை சிறப்புற நடாத்தி உதவியவர்களுக்கும்
கலந்து கொண்டவர்களுக்கும்

*எமது நன்றிகள்*

23 Springrice Road
Hithergreen
London SE13

பிள்ளைகள்
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

**20-02-2000**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org